(முற்பகல் 10-20)

3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) உறுப்பினருக்குப் பேச வாய்ப்பளித்தல்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நேற்று ஒரு துக்ககரமான சம்பவம் நடந்து இருக்கிறது. அதற்கான ஆட்சேபனையைத் தெரிவிக்க விரும்புகிறேன். நேற்று எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. தியாகராசன் அவர்கள் நான்கு, ஐந்து முறை பேச வேண்டும் என்று கேட்ட பிறகும்கூட அவர்களைப் பேசுவதற்கு துணைத் தலைவர் அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்போது விவாதத்தில் இருந்த சட்ட முன்வடிவு இன்றைக்கும் விவாதிக்கப்பட இருந்ததால் இன்று அவர் பேசலாம் என்று சொல்லப்பட்டது.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : தலைவரவர்களே, இது எங்களை மிகவும் பாதிக்கக்கூடியதாகும். அவர் 3, 4 தடவை பேசுவதற்கு அனுமதி கேட்டும்கூட அவருக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. எங்களுடைய கட்சி ஆல் இந்தியா கட்சி, உலகத்திலேயே ஒரு மகத்தான கட்சி என்று சொன்னால் அதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆகவே இம்மாதிரியான சம்பவம் திரும்பவும் நடக்கக்கூடாது என்பதற்காக அதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

[காங்கிரஸ் (இ) கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளிநடப்பு செய்தனர்.]

திரு. ப. நெடுமாறன் : *** ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளிநடப்பு செய்வது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரிமை. ஆகவே அதைத் தடுக்க முடியாது.

திரு. ப. நெடுமாறன் : *** ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவைக் குறிப்பிலே ஏறவேண்டாம்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1981 பிப்ரவரி 27] [பேரவைத் தலைவர்]

நேற்றையதினம் திரு. தியாகராசன் அவர்கள் பேசவேண்டுமென்று இரண்டுமூன்றுமுறை முயற்சித்ததாகப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலம் நான் அறிந்தேன். அவரது கொறடா அவரது பெயரை முன்பே கொடுத்திருந்தால் பேசுவதற்கு அழைத்திருப்பார். அவரது பெயர் கொடுக்கப்பெறவில்லை. பேச விரும்புகிறவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுதான் வருகிறது.

இதிலே இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்கிற எந்தவிதமான பாகுபாடும் கிடையாது. மேலும் நேற்றைதினமே துணைத் தலைவர் அவர்கள் திரு. தியாகராசன் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கத்தான் இருந்தார்கள். ஆனால் அதற்குள்ளாக அவர் கோபித்து வெளிநடப்புச் செய்துவிட்டார். மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் பேசுவதற்கு தங்கள் முறை வருகின்றவரையில் கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும். தம்மை மதிக்கவில்லையோ என்று எண்ணி கோபப்படாமல் இருக்க வேண்டும். பேரவைத் தலைவருடன் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைத்தால்தான் அவையின் நடவடிக்கைகளை அவரால் சீராக நடத்திச் செல்ல முடியும். பேரவைத் தலைவருக்கு எல்லா உறுப்பினர்களும் சமம்தான்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சனை எழுப்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவரவர்களே,........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திரு. சித்தன் அவர்கள் முடிக்கட்டும்.

Thirumathi A.S.PONNAMMAL: I am the seniormost Member.

Thiru N.S.V. CHITHAN : There is no question of seniority. I am on a point of order. The Hon. Speaker has allowed me to speak..........

[1981 பிப்ரவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பொன்னம்மாள் சீனியர்மோஸ்ட் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம் எனினும் திரு. சித்தன் அவர்கள் பேசியபிறகு அவர்கள் பேசலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்; தலைவர் அவர்களே, இந்த அவையில் எங்களுடைய கட்சி இரண்டாவது பிரதான எதிர்க் கட்சியாக இருக்கிறது. ஒவ்வொரு கட்சியாகப் பேசுவதற்கு அனுமதி கொடுத்துக்கொண்டே வந்ததாக நீங்கள் சொன்னீர்கள். ஆனால் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் பேசிய பிறகு எங்களை நீங்கள் அழைக்கவே இல்லை. ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பேசிய பிறகாவது அனுமதி கொடுத்திருக்கலாம். அப்போதும் தரவில்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்பிரச்னை குறித்து நீங்கள் என்னிடம் நேற்று கேட்கவில்லை, நீங்களாகவே ஒரு முடிவினை எடுத்து வெளிநடப்புச் செய்துவிட்டீர்கள். முடிந்து போன அப்பிரச்னை குறித்து இப்போது எதுவும் எழுப்ப வேண்டாம். ஒரு தீர்மானம் அல்லது பில்லின் மீது பேசுகையில், எதிர்க்கட்சி, இரண்டாவது எதிர்க்கட்சி மூன்றாவது எதிர்க் கட்சி என்று பார்த்துப் பேச அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. யார் யார் பெயர் கொடுத்திருக்கிறார்களோ அவர்களைப் பேச அழைக்கிறோம். நேற்றுக் கூட ஓட்டல் சம்பந்தப் பட்ட பில்லின் மீது துரை முருகன் பேசியபிறகு யாராவது பேசுகிறீர்களா என்று கேட்டேன். வேறு யாரும் பேச முன்வரவில்லை.......

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, தாங்கள் எங்களை இரண்டாவது பிரதான எதிர்க்கட்சியாக நினைத்து அழைக்கவில்லை என்பது மட்டுமல்ல, மற்ற சிறு கட்சிகளுக்கு ஒதுக்கப்படுகிற நேரம் கூட எங்களுடைய கட்சிக்கு ஒதுக்கப்படுவதில்லை. ஒதுக்கப்படுகிற நேரம் எங்களுக்குப் போதுமானதாகவும் இல்லை........(குறுக்கீடு— கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். வெளிநடப்புப் பிரச்னை முடிந்துவிட்டது. வேறு பிரச்னையாக இருந்தால் பேசலாம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மசோதாவின் மீது பேசுவதற்கு பெயர் கொடுப்பதுதான் வழக்கம் என்பதுபோல குறிப்பிட்டீர்கள். யார் பேசுவதற்குக் கையைத் தூக்குகிறார்களோ, அவர்களையும் பேச அழைக்கலாம். அப்படியும் வழக்கம் இருக்கிறது என்று உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். அந்த உறுப்பினர் கையைத் தூக்கிக்கொண்டே இருந்தும் கூட அவரை அழைக்கவில்லை என்பதுதான் பிரச்னை.

1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிக் கையைத் தூக்குபவர்களை அழைக்கும் பிரச்னையில் ஒரு முக்கியமான சங்கடம் இருக்கிறது. முன் வரிசையில் உள்ள தலைவர்களும் கையை தூக்குகிறார்கள். பின்னால் இருக்கும் அவர்களது கட்சி உறுப்பினர்களும் கையைத் தூக்குகிறார்கள். கட்சித் தலைவர்கள் என்ற முறையிலும், அவர்கள் தங்கள் கட்சியின் சார்பாக அதிகமான விவரங்களைக் கேட்கக் கூடும் என்ற முறையிலும் அவர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டியது என்னுடைய கடமை. அப்படித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கிறபோது மற்றவர்கள் கோபித்துக்கொண்டு வெளிநடப்புச் செய்தால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்? எந்தெந்தப் பிரச்னையில் யார் யாருக்கு அதிக ஈடுபாடு உண்டு என்பதையும் கவனத்தில் கொண்டுதான் நேரம் ஒதுக்கப்பெறுகிறது. தொழிலாளர்கள் பிரச்னை என்றால் கம்யூனிஸ்ட் கட்சியினர் அதிகமாகப் பேச விரும்புவார்கள். திருநெல்வேலி சம்பந்தப்பட்ட கேள்வி என்றால் அந்தத் தொகுதி உறுப்பினர் அதிகமாகக் கேட்க விரும்பலாம். ஆகவே, இந்த முறையை மாற்றுவதற்கு அவசியம் இல்லை....

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நாங்கள் வெளிநடப்புச் செய்த நேரத்திலே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அனுமதிக்க முடியாது. வெளிநடப்புச் சம்பந்தமான பிரச்னை முடிந்துவிட்டது. இனிமேல், அதன்மீது பேசுவதை நான் அனுமதிக்க மாட்டேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பிரச்னை அதுவல்ல. வேறு விஷயம்தான். தலைவர் அவர்கள் தயவு செய்து அனுமதிக்க வேண்டும். * * * * *

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சி அரசியல் பற்றியெல்லாம் சட்டசபைக்கு வெளியே போய் பேசலாம்.

I have not allowed the hon. Member Thiru Nedumaran to say anything against your party.

திரு. எல். இளையபெருமாள் * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * விவாதத்தையெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி * * * *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. எல்லாக் கட்சிக்காரர்களும் பேச வேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படிப் பேசுவதில் ஆட்சேபணையில்லை. யார் யார் பேச இருக்கிறார்கள் என்பதை கொறடா மூலம் எழுதி அனுப்புங்கள்.

4. உரிமைப் பிரச்சினை.

(அ) 'பத்திரிகையில் வெளிநடப்பு குறிப்பிடாதது.

திரு. செ. சிவசாமி : ஒரு முக்கியமான மசோதாவை அறிமுகம் செய்கிறபோது அத்தனை எதிர்க்கட்சிகளும் அதை எதிர்த்து வெளிநடப்பு செய்தன. அது பத்திரிகைகளில் எல்லாம் வந்துள்ளது. ஆனால், அரசாங்கத் தரப்பில் அரசாங்கச் செய்தி என்று வரக்கூடிய பத்திரிகையில் வெளிநடப்பு சம்பந்தமாக எந்தவிதமான குறிப்பும் கிடையாது. இது ஒரு உரிமைப் பிரச்னையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதிக் கொடுங்கள், பின்னர் பார்க்கலாம்.

(ஆ) போலீஸ் ஸ்பெஷல் பிராஞ்ச் எஸ். பி. அனுப்பிய சுற்றறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 246-ஆவது விதியின்கீழ் திரு. ரா. உமாநாத் அவர்களும், திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களும் அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை குறித்து அறிக்கை கொடுத்து, அதுகுறித்து பேச அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதற்கு நான் அனுமதி அளிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே, இதை அவை முழுவதும், அவை அங்கத்தினர்கள் எல்லோரும், நீங்கள் உட்பட சம்பந்தப்பட்ட ஒரு பிரதான பிரச்னையாக, சீரியஸ் பிரச்னையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னை பற்றி விளக்கங்கள் அரசு தரப்பிலே திரட்டப்படுகின்றது. தகவல்கள் வந்த பிறகுதான் இதற்கேற்ற பதில்களை, விளக்கங்களைத் தர முடியும். நாளையோ அல்லது அடுத்த நாளோ வைத்துக்கொண்டால், அதற்கேற்ற விளக்கங்களைத் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).